©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.00 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 14] CHENNAI, WEDNESDAY, APRIL 1, 2020
Panguni 19, Vikari, Thiruvalluvar Aandu–2051

# Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

## CONTENTS

| | Pages. |
|---|---|
| HOME DEPARTMENT | |
| Family Courts Act.– Appointment on Transfer of certain District Judges Posted as Judges and Principal Judges of the Family Courts in certain Districts .. .. .. .. .. .. .. .. | 174 |
| HOUSING AND URBAN DEVELOPMENT DEPARTMENT | |
| Tamil Nadu Town and Country Planning Act.—Confirmation of Addition of Certain Villages in Gummidipoondi Local Planning Area .. .. .. .. .. .. .. .. | 174-175 |
| Amendment to Notification | |
| Confirmation of Addition of Certain Villages in Chidambaram Local Planning Area .. .. .. .. .. .. .. .. | 175-176 |
| Amendment to Notification | |
| தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | |
| Industrial Tribunal for Adjudication .. .. .. .. .. .. | 176-178 |
| Labour Courts for Adjudication .. .. .. .. .. .. | 178-181 |



D,T,P,—II-2 (14)—1

## NOTIFICATIONS BY GOVERNMENT

HOME DEPARTMENT

**Appointment on Transfer of certain District Judges Posted as Judges and Principal Judges of the Family Courts in certain Districts under the Family Courts Act.**

*[G.O. (D).No. 507, Home (Courts-II), 12th March 2020, மாசி 29, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/233/2020.—In exercise of the powers conferred under sub-section (1) of Section 4 of the Family Courts Act, 1984 (Central Act 66 of 1984), the Governor of Tamil Nadu with the concurrence of the High Court, Chennai hereby makes the with following appointment on transfer.

| *Sl. No.* | *Name and Designation Thiru/Tmt./Selvi* | *Ordered to be posted as* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | A. Dhanasekaran, III Additional District Judge (PCR), Madurai. | Judge, Family Court, Perambalur in the newly sanctioned Court, to be inaugurated shortly. |
| 2 | M. Akila Shalini, Additional Principal Judge, Family Court, Coimbatore. | Judge, Family Court, Pudukkottai in the newly sanctioned Court, to be inaugurated shortly. |
| 3 | K. Kayathri, Sessions Judge, Special Court for trial of cases registered under SC/ST (PoA) Act, Tiruvannamalai. | Judge, Family Court, Tiruvannamalai in the newly sanctioned Court, to be inaugurated shortly. |

S.K. PRABAKAR,
*Additional Chief Secretary to Government.*

HOUSING AND URBAN DEVELOPMENT DEPARTMENT

**Notifications under the Tamil Nadu Town and Country Planning Act.**

**Confirmation of Addition of Certain Villages in Gummidipoondi Local Planning Area under the Act.**

**Amendment to Notification**

*[G.O.Ms. No. 50, Housing and Urban Development [UD4(2)], 11th March 2020, மாசி 28, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HOU/234/2020.—In exercise of the powers conferred by sub-section (4) of Section 10 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972), the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the Housing and Urban Development Department Notification No.II(2)/HOU/1573/80, published at page 247 of Part II – Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated the 16th April 1980, the intention to do so having been previously published as required by clause (b) of sub-section (1) of the said Section 10 of the Act:-

AMENDMENT.

In the said Notification, for the TABLE, the following TABLE shall be substituted, namely:-

THE TABLE.

| *Serial Number* | *Name of the Local Planning Area* | *Number and Name of revenue Villages* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **1.** | **Gummidipoondi** | **Gummidipoondi Taluk.** |
| | | 44 Annappanaikenkuppam |
| | | 81 Melmudalambedu |
| | | 80 Thandalacheri |
| | | 45 Getnamallee |
| | | 46 Sirupulalpettai |
| | | 47 Chinthalakuppam |
| | | 48 Karumbukuppam |
| | | 76 Paleswarankandigai |
| | | 77 Pudu Gummidipoondi |
| | | 78 Verkadu |
| | | 74 Nangapallam |
| | | 73 Guruvatucheri |
| | | 75 Pazhaya Gummidipoondi |
| | | 70 Chinna Soliamppakkam |
| | | 71 Peria Soliampakkam |
| | | 72 Enadimelpakkam |
| | | 64 Athupakkam |
| | | 63 Thervali |
| | | 62 Peddikuppam |
| | | 61 Chinna Obulapuram |
| | | 49 Pappankuppam |
| | | 19 Chinnapuliyur |
| | | 20 Periapuliyur |
| | | 66 Valuthalambedu |
| | | 67 Rettampedu |
| | | 50 Periaobulapuram |
| | | 60 Thurapallam |
| | | 8 Edur |
| | | 17 Sithurnatham |
| | | 9 Eguvarpalayam |
| | | 14 Madarpakkam |
| | | 15 Vaniamallee |
| | | 18 Amirthamangalam |
| | | 79 Kilmudalambedu |
| | | 82 Puduvoyal |
| | | 29 Thervoy |

| *Serial Num-ber* | *Name of the Local Planning Area* | *Number and Name of revenue Villages* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | **Ponneri Taluk.** |
| | | 49 Paranambedu |
| | | 63 Vadakka Nallur |
| | | 62 Durainallur |
| | | 51 Thiruppair |
| | | 52 Eliambedu |
| | | 50 Kilikkodi |
| | | 43 Kattavoor.". |

**Confirmation of Addition of certain Villages in Chidambaram Local Planning Area under the Act.**

Amendment to Notification

*[G.O.Ms. No. 51, Housing and Urban Development [UD4(2)], 11th March 2020, மாசி 28, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HOU/235/2020.—In exercise of the powers conferred by sub-section (4) of Section 10 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972), the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the Rural Development and Local Administration Department Notification No.II(2)/RUL/2006/74, published at page 207 of Part II – Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated the 10th April 1974, the intention to do so having been previously published as required by clause (b) of sub-section (1) of the said section 10 of the Act:-

AMENDMENT.

In the said Notification, for the TABLE, the following TABLE shall be substituted, namely:-

"THE TABLE.

| *Serial Number* | *Name of the Local Planning Area* | *Number and Name of revenue Villages* | |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | |
| **1.** | **Chidambaram** | **Chidambaram Taluk.** | |
| | | 74 | Chidambaram (Municipal Area) |
| | | 45 | Kirappalaiyam |
| | | 46 | Mel Mungiladi |
| | | 47 | Kil Mungiladi |
| | | 50 | Palvattangarai |
| | | 51 | Melchokkanathan-pettai |
| | | 52 | Vayalur |
| | | 53 | Mel Vanniyur Chidambaram) |
| | | 54 | Lalpuram |
| | | 55 | Ennanagaram |
| | | 56 | Kannangudi |
| | | 57 | Parameswaranallur |
| | | 58 | Tandeswaranallur |
| | | 59 | Viracholagan (E) & (W) |
| | | 60 | Tunisiramedu |
| | | 61 | Nanjalur |
| | | 62 | Sivayam |
| | | 63 | Pulamedu |
| | | 64 | Tavartambattu |
| | | 65 | Gudalur (Kattugudalur) |
| | | 66 | Vakkaramari Chidambaram) |
| | | 67 | Ilanangur |
| | | 68 | Vaiyur |
| | | 69 | Agaranallur |
| | | 70 | Saliyantoppu |
| | | 71 | Kuttankovil |
| | | 72 | Chettimuttu |
| | | 73 | Chidambaram (Non Municipal) |
| | | 76 | Midikudi |
| | | 82 | Kilkundalappadi |
| | | 83 | Perambattu |
| | | 84 | Sivapuri |
| | | 85 | Pettai |
| | | 86 | Varagur |
| | | 87 | Jayamkondapattanam |
| | | 88 | Ambigapuram |
| | | 89 | Tirukkalippalai (Mel) |
| | | 90 | Gavarappattu |
| | | 91 | Vasaputtur |
| | | 92 | Chittalappadi |
| | | 93 | Tiruvakkulam (Annamalai Nagar T.P.) |
| | | 94 | Kumaramangalam |

| *Serial Number* | *Name of the Local Planning Area* | *Number and Name of revenue Villages* | |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | |
| | | 95 | Chidambaranathan-pettai |
| | | 96 | Nakkaravandankudi |
| | | 97 | Kodippallam |
| | | 98 | Kovilampundi |
| | | 102 | Nanjaimagattuvalkkai (E)&(W) |
| | | 105 | Tillaivadangan (N) & (S) |
| | | 106 | Pinnattur (E) & (W) |
| | | 107 | Radhavilagam |
| | | 108 | Uttamacholaman-galam |
| | | 109 | Kanakkarpattu |
| | | 110 | Kil Perambai". |

RAJESH LAKHONI,
*Principal Secretary to Government.*

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**Disputes between Workmen and Managements referred to Industrial Tribunal For Adjudication**

**பாக்ஸ்கான் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சுங்குவார்சத்திரம்**

*[அரசாணை (ப) எண்.159, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 06 மார்ச் 2020, மாசி 23, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/236/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரத்தில் இயங்கி வரும் பாக்ஸ்கான் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் ஒன்றுபட்ட தொழிலாளர் கூட்டமைப்பு, சென்னை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறில், அரசாணை (ப) எண்.620, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 01–11–2018–ல் சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விட மறுக்கப்பட்ட தொழிற்சங்கத்தின் கோரிக்கைகளான எண்.1, 7, 10, 11, 12, 13, 17, 18, 21, 22, 23, 24, 25, 26, 27, 29, 30, 31 மற்றும் 32 ஆகியவற்றை சென்னை உயர்நீதிமன்றத்தின் 24–07–2019–ஆம் நாளிட்ட உத்தரவிற்கிணங்க, சென்னை, தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)–ன் பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, சென்னை, தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**(1) கோரிக்கை எண். 1 (தொழிற்சங்கத்தை அங்கீகரித்தல்)**

எதிர்மனுதாரர் தொழிற்சாலையில் செயல்பட்டு வரும் பெரும்பான்மை மற்றும் ஒரே தொழிற்சங்கமான மனுதாரர் தொழிற்சங்கத்தை தொழிலாளர்களின் உண்மையான பிரதிநிதித்துவம் பெற்ற சங்கமாக (Sole Bargaining Agent) எதிர்மனுதாரர் நிர்வாகம் அங்கீகரித்து. நிர்வாகத்துடன் கூட்டு பேரம் நடத்தும் ஒரேசங்கமாக அறிவிக்க வேண்டும் என கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(2) கோரிக்கை எண். 7 கல்விப்படி (Education Allowance):**

அனைத்து தொழிலாளர்களுக்கும் இதுவரை வழங்கப்படாத கல்விப்படியை வருடத்திற்கு ரூ.6,000/– வழங்கப்பட வேண்டும் எனவும், ஆண்டுதோறும் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி செலவினங்களை சமாளிக்க இத்தொகை “மே” மாதம் 10–ம் தேதிக்குள் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(3) கோரிக்கை எண். 10 விடுப்பு கால பயணப்படி (Leave Travel Allowance):**

அனைத்து தொழிலாளர்களுக்கும் தற்போது மாத ஊதியத்திலிருந்து இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பிடித்தம் செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வரும் விடுப்பு கால பயணப்படியை மாற்றி ஒரு மாதத்திற்கான ஊதியத்தினை தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யாமல் வழங்கப்பட வேண்டும் என கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(4) கோரிக்கை எண். 11 வருகைப்பதிவு ஊக்கத்தொகை (Attendance Incentive):**

அனைத்து தொழிலாளர்களுக்கும் இதுவரை வழங்கப்படாத வருகைப்பதிவேடு ஊக்கத்தொகையாக ரூ.500/– வழங்கப்பட வேண்டும் என்றும், சட்டப்படி எடுக்கக்கூடிய விடுப்பு எடுத்தாலும் இதை வழங்க வேண்டும் என கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(5) கோரிக்கை எண். 12 ஆயுள் காப்பீட்டு வசதி (Insurance Facility):**

அனைத்து தொழிலாளர்களுக்கும் இதுவரை வழங்கப்படாத Insurance வசதி ரூ.1,00,000/– செய்து தரப்பட வேண்டும் என கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(6) கோரிக்கை எண். 13 உற்பத்தி ஊக்கத்தொகை:**

உற்பத்தி செய்யப்படும் நெட்வொர்க் உதிரி பாகங்களின் விற்பனை விலையில் ஒரு சதவீதத்தை ஊக்கத்தொகையாக நேரடி உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்றும், இந்த ஊக்கத்தொகையினை ஒவ்வொரு ஆண்டும் “மே” மாதம் 7–ஆம் தேதி வழங்கப்பட வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(7) கோரிக்கை எண். 17 உணவுக் கூடம் (Canteen):**

வாரத்தில் இரண்டு நாள் சிக்கன், ஒரு நாள் மட்டன், தினம் ஒரு முட்டை மற்றும் வாழைப்பழம் வழங்க வேண்டும் என கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(8) கோரிக்கை எண். 18 ஞாயிற்று கிழமை சிறப்பு ஊதியம் (Sunday Payment for Special Work):**

தற்போது நடைமுறையில் வழங்கப்பட்டு வரும் விடுப்பானது ஞாயிற்றுக்கிழமையே அறிவிக்க வேண்டும் என்றும், உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக ஞாயிற்றுக்கிழமை பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மிகை நேரமாகவும், அடிப்படை சம்பளத்தை மூன்று மடங்காக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கைகள் நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(9) கோரிக்கை எண். 21 பணிக்கால மரணம்:**

இதுவரை அமல்படுத்தபடாத பணிக்கால மரணத்திற்கான திட்டம் அமல்படுத்தப்பட்டு தொழிலாளர்களின் பங்களிப்பாக அனைத்து நிரந்தர தொழிலாளர்களின் மாத ஊதியத்தில் ஒரு நாள் ஊதியம் பிடித்தம் செய்து தரப்பட வேண்டும் என்றும், மேற்படி தொகையுடன் நிர்வாகத்தின் பங்களிப்பாக 1:3 ஈடாக சமதொகையை வழங்க வேண்டும் என்றும், நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கம் இணைந்து இத்தொகையை மரணம் அடையும் தொழிலாளியின் குடும்பத்தாரிடம் ஒப்படைக்க வேண்டும், என்றும், மேலும், பணிகாலத்தில் மரணம் அடையும் தொழிலாளர்களின் குடும்பத்தை சேர்ந்த ஒருவருக்கு தொழிற்சாலையில் நிரந்தர பணியினை வழங்க வேண்டும் என்றும் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கைகள் நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(10) கோரிக்கை எண். 22 ஈமச்சடங்கு செலவுகள் (Funeral Expenses):**

இதுவரை நடைமுறையில் இல்லாத ஈம சடங்கு உதவித்தொகை தொழிலாளியின் குடும்ப உறுப்பினர் மரணம் அடைந்தால் ரூ.10,000/– வழங்கப்பட வேண்டும் என்றும், தொழிலாளி மரணம் அடைந்தால் ரூ.25,000/– ஈமச்சடங்கு உதவித்தொகையாக வழங்க வேண்டும் என்றும், தொழிலாளியின் குடும்ப உறுப்பினர்கள் மரணம் அடைந்தால் 5 நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என்றும், இந்த விடுப்பை தொழிலாளியின் வழக்கமான விடுப்பாக கருதாமல் அந்த நாட்களுக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கைகள் நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(11) கோரிக்கை எண். 23 தொழிற்சங்க அலுவலகம் (Union Office):**

பெரும்பான்மை தொழிலாளர்கள் கொண்ட மனுதாரர் சங்கத்திற்கு தொழிற்சங்க கிளை அலுவலகம், தொலைபேசி வசதியுடன் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்றும், மேலும் தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு தொழிற்சங்க தொழிலாளர்களின் சுப, துக்க நிகழ்ச்சிகளில் பங்கேற்க செல்லும்போது On Duty மற்றும் Vehicle வழங்க வேண்டும் என்றும் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(12) கோரிக்கை எண். 24 இடைவெளி நேரம் (Break Time):**

ஏற்கனவே நடைமுறையில் உள்ள 5 நிமிடம் இடைவேளை நேரத்தை 10 நிமிடமாக உயர்த்தி இரண்டு வேளையும் Tea & Snacks வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(13) கோரிக்கை எண். 25 திருமண உதவித் தொகை (Marriage Assistance):**

அனைத்து தொழிலாளர்களுக்கும் திருமணத்தின் போது உதவித் தொகையாக ரூ.10,000/– வழங்கப்பட வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(14) கோரிக்கை எண். 26 பிறந்தநாள் பரிசுத் தொகை (Birthday Gift):**

ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் பிறந்தநாள் பரிசுத்தொகை ரூ.200/–லிருந்து ரூ.800/– உயர்த்தி ரூ.1,000/–ஆக வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(15) கோரிக்கை எண். 27 விழாக்கால முன்பணம் (Festival Advance):**

விழாக்கால முன்பணமாக ரூ.10,000/– வழங்கி தொழலாளியின் ஊணியத்திலிருந்து மாதா மாதம் பிடித்தம் செய்ய வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(16) கோரிக்கை எண். 29 ஆயுத பூஜை பரிசுத் தொகை (Ayudhapooja Gift Allowance):**

அனைத்து தொழிலாளர்களுக்கும் ஆயுத பூஜை பரிசுத் தொகையாக ரூ.5,000/– வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(17) கோரிக்கை எண். 30 பேருந்து வசதி (Transport Facility):**

ஏற்கனவே நடைமுறையில் உள்ள பேருந்து வசதியை அனைவருக்கும் எளிதாக கிடைக்கும் வண்ணம் rationalize செய்யப்பட வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(18) கோரிக்கை எண். 31 கண்காணிப்பு கேமரா:**

தொழிற்சாலையில் உள்ள உற்பத்தி துறையில் மற்றும் அனைத்து இடங்களிலும் கேமராவை அகற்ற வேண்டும் என்றும், மேலும் புதிய கேமராக்களை பெரும்பான்மை தொழிற்சங்கத்தின் ஒப்புதல் இல்லாமல் ஆலைக்குள் நிறுவக்கூடாது என்றும் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(19) கோரிக்கை எண். 32 இடைக்கால நிவாரணம் (Interim Relief):**

ஊதியஉயர்வு பிரச்சனை தொடர்பான தொழிற்தாவா தொழிலாளர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் இடைக்கால நிவாரணமாக மாதம் ரூ.10,000/– வழங்கப்பட வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

### செலிபிரிட்டி பேஷன்ஸ் லிமிடெட்

*[அரசாணை (ப) எண்.173, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 10 மார்ச் 2020, மாசி 27, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/237/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக செலிபிரிட்டி பேஷன் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் கார்மெண்ட்ஸ மற்றும் பேஷன் ஒர்க்கர்ஸ் யூனியன் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை, தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், **10(1)**(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, சென்னை, தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண். 2**

"தொழிலாளர்களுக்கு ரூ.18,000/– சம்பளத்தை பஞ்சப்படியுடன் வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்க".

**கோரிக்கை எண். 3**

**2016–2017–**ம் ஆண்டிற்கு 20% போனஸ் வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை எண்.12**

"அனைத்து தொழிலாளர்களுக்கும் இரண்டு சீருடைகள் மற்றும் சலவை சலுகை வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்க".

## Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை

*[அரசாணை (டி) எண்.152, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 05 மார்ச் 2020, மாசி 22, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/238/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை என்ற நிர்வாகத்திற்கும் நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள் பாதுகாப்பு தொழிற்சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, கோவை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. A. செந்தில்குமார் (ப.எண்.C24437) நடத்துனருக்கு நிர்வாகம் **26–02–2017** அன்று வழங்க வேண்டிய முதல் கட்ட ஆய்வு பலன்களை (review) **26–02–2017** முதல் முறையாக வழங்கியும் அதற்கான நிலுவைத் தொகையினையும் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம்தானா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்க.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., காரைக்குடி

*[அரசாணை (டி) எண்.153, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 06 மார்ச் 2020, மாசி 23, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/239/2020.— இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., காரைக்குடி என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் சங்கம் (CITU), காரைக்குடி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10** **(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு.பி. சுப்பிரமணியன், ஓட்டுனரின் (பணி எண் **92**டிஆர்**3003)** அடுத்த கட்ட ஊதிய உயர்வை **18** மாத காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தி வைத்து நிர்வாகம் பிறப்பித்த **30–01–2016** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண்.160, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 09 மார்ச் 2020, மாசி 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/240/2020.— இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., காரைக்குடி என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் சங்கம் (CITU), காரைக்குடி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு.பி. சப்பாணி, ஓட்டுனரின் (பணி எண் **13**டிஆர்**3046)** அடுத்த கட்ட ஊதிய உயர்வை **2** வருட காலத்திற்கு அதன் திரண்ட பயனின்றி நிறுத்தி வைத்து நிர்வாகம் பிறப்பித்த **18–11–2017** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண்.162, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 09 மார்ச் 2020, மாசி 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/241/2020.— இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., காரைக்குடி என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் சங்கம் (CITU), காரைக்குடி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு.எஸ். ஆறுமுகம், நடத்துனரின் (பணி எண் **98**சிஆர்**3109)** அடுத்த கட்ட ஊதிய உயர்வை **6** மாத காலத்திற்கு அதன் திரண்ட பயனின்றி நிறுத்தி வைத்து நிர்வாகம் பிறப்பித்த **27–10–2017** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

*[அரசாணை (டி) எண்.168, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 10 மார்ச் 2020, மாசி 27, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/242/2020.— இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிட்., காரைக்குடி என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் சங்கம் (CITU), காரைக்குடி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10** (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு.கே. ஜீவானந்தம், நடத்துனரின் (பணி எண் 08சிஆர்3389) அடுத்த கட்ட ஊதிய உயர்வை 4 வருட காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தி வைத்து நிர்வாகம் பிறப்பித்த 10–11–2017 நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்**

*[அரசாணை (ப) எண்.158, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 06 மார்ச் 2020, மாசி 23, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/243/2020.— இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

"திரு. ஆர். திருஞானம் (எடையாளர்) என்பவருக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளரால் வழங்கப்பட்ட தண்டனை உத்தரவு ந.க.எண்.அ/18/008309/2014, நாள் 03–08–2015–ஐ ரத்து செய்தும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது மேலாளரின் செயல்முறை ஆணை எண்.ஏடி1/49525/2017, நாள் 22–11–2017–ஐ ரத்து செய்தும், தனியருக்கு முன் தேதியிட்டு கிடைக்க வேண்டிய அனைத்து பலன் மற்றும் பணப்பயன்களும் நிர்வாகம் வழங்க வேண்டும் என கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்க.

**M/s. டான்டீ தேயிலை குழுமம், சின்கோனா, வால்பாறை**

*[அரசாணை (டி) எண்.163, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 09 மார்ச் 2020, மாசி 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/244/2020.— இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக M/s. டான்டீ தேயிலை குழுமம், சின்கோனா, வால்பாறை என்ற நிர்வாகத்திற்கும் ஆனைமலை ஒர்க்கர்ஸ் யூனியன், வால்பாறை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன், கோவை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, கோவை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

வால்பாறை சின்கோனா, டான்டீ தேயிலை குழும நிர்வாகத்தால், மனுதாரர் தொழிற்சங்க உறுப்பினரான திரு. மணிகண்டன் என்பவருக்கு 16–11–2011–ல் நிர்ணயித்து நியமன அறிக்கையுடன் வழங்கப்பட்டு வந்த மேற்பார்வையாளர் பணியினை மீண்டும் வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**டோபாஸ் டூல் கம்பெனி பிரைவேட் லிட், சென்னை**

*[அரசாணை (ப) எண்.164, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 09 மார்ச் 2020, மாசி 26, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/245/2020.— இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக டோபாஸ் டூல் கம்பெனி பிரைவேட் லிமிடெட், என்ற நிர்வாகத்திற்கும் ஜனநாயக தொழிலாளர் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

சென்னை, வில்லிவாக்கம், டோபாஸ் டூல் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிர்வாகம், 22–05–2014 அன்று முதல் அந்நிறுவனத் தொழிலாளர்களான திரு. G ஆனந்தன் உள்ளிட்ட கீழ்காணும் 15 தொழிலாளர்களுக்கு அறிவித்த கதவடைப்பை விலக்கி கொள்ளவும், மீண்டும் பணியமர்வு வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

1. G. ஆனந்தன்
2. D. அன்புமணி
3. S.R. மணிகண்டன்
4. R. மணிகண்டன்
5. P. ராஜா
6. J. மணிகண்டன்
7. S. கொள்ளாபுரி
8. K. ராஜேந்திரன்
9. S. செந்தில்குமார்
10 S. ஆறுமுகம்
11. S. கிருஷ்ணராஜ்
12 S. கமலக்கண்ணன்
13. K. சிவக்குமார்
14. N. ஆனந்தன்
15. C. கோவிந்தராஜ்

**கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், பிளாண்ட் 2 மேட்டூர் அணை, சேலம்**

*[அரசாணை (டி) எண்.169, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 10 மார்ச் 2020, மாசி 27, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/246/2020.— இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், பிளாண்ட் 2 மேட்டூர் அணை, சேலம் என்ற நிர்வாகத்திற்கும் மேட்டூர் கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ் தொழிலாளர்கள் சங்கம், சேலம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன், சேலம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, கோவை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண். 3**

அங்கீகரிக்கப்பட்டதொழிற்சங்கங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட **18(1)** ஒப்பந்தத்தை அங்கீகரிக்கப்படாத சிஐடியு தொழிற்சங்க உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வகையில் சிஐடியு தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு மறுக்கப்பட்டு வருவது தொழிலாளர் விரோத போக்கு தானா ?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 5**

சிஐடியு தொழிற்சங்கத்தை சேர்ந்த தொழிலாளர்களுக்கு மட்டும் பணி நிரந்தர நியமன ஆணை வழங்கப்படாதது மற்றும் மருத்துவ பரிசோதனைக்கான செலவு தொகை வழங்கப்படாதது தொழிலாளர் விரோத போக்குதானா ?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 7**

திரு. பூவரசன், திரு.என். முடியரசன் மற்றும் திரு. கே. முகமதுதோபிக் ஆகியோரது பணியிட மாற்றத்தை ரத்து செய்ய வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானாதா ?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**முகமது நசிமுத்தின்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU